தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
June 29, 2012

# சங்கர நேத்ராலயா அகடமி புதிய படிப்புகள் அறிமுகம்

சென்னை, ஜூன் 29-

மருத்துவத் துறை சார்ந்த அறிவியல் மற்றும் மருத்துவமனை நிர்வாகம் உள்ளிட்ட புதிய படிப்புகளை, சங்கர நேத்ராலயா அகடமி அறிமுகப்படுத்தியுள்ளது.

பிளஸ் 2 மற்றும் அதற்கு இணையான கல்வித் தகுதியுள்ளோர், கண் மருத்துவச் செவிலியர் உதவியாளர், ஆபரேஷன் தியேட்டர் மற்றும் மயக்க மருந்தியல் டெக்னாலஜி உள்ளிட்ட பட்டய படிப்பிற்கும், பி.எஸ்சி., (மெடிக்கல் லேப் டெக்னாலஜி) இளங்கலை பட்டப் படிப்பிற்கும் விண்ணப்பிக்கலாம்.

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., இந்திய மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த அறிவியல் பட்டம் பெற்றவர்கள், எம்.பி.ஏ., (மருத்துவமனை மற்றும் சுகாதார மேலாண்மை முறை) முதுகலை பட்டப் படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது, "www.thesnacademy.ac.in' என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும் தகவலுக்கு, அகடமி ஆபீசர், சங்கர நேத்ராலயா அகடமி, எண் 29, ஜெயலட்சுமி எஸ்டேட், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-6 என்ற முகவரியிலோ அல்லது 97104-85295 என்ற மொபைல் எண்ணிலோ, "mahali@thesnacademy.ac.in' என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் அறிந்து கொள்ளலாம் என, சங்கர நேத்ராலயா அகடமி அலுவலர் மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.